Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.193/2025

Dated 23-02-2026
Deposition of witness for : PW 4

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சர்மீளா | வயது | : | 53 |
| தந்தை பெயர் | : | புருஷோத்தமன் | தாலுக்கா | : | நாகப்பட்டினம் |
| கிராமம் | : | நாகப்பட்டினம் | தொழில் | : | காவல் ஆய்வாளர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused absent 355 BNSS Petition filed and allowed.**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது நாகப்பட்டினம் குற்றப்பிரிவு குற்ற புலனாய்வு துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.

2) கடந்த 27.4.2024 ம் தேதி நான் தஞ்சாவூர் மாவட்டம் திருவையாறு காவல் வட்ட ஆய்வாளராக பணியில் இருந்த போது திருவையாறு காவல்நிலைய சரகத்தில் திருவையாறு

காவல்நிலைய தலைமை காவலர் 2221 திரு அந்தோணிஅமல்தாஜ், காவலர் 1368 அசோக் ஆகியோர்களுடன் ரோந்து பணியில் இருந்தபோது தஞ்சாவூர் - அரியலூர் மெயின்ரோடு, புறவழிசாலை அருகில் ஒருநபர் கத்திபோன்ற நீண்ட வாளை வைத்துக்கொண்டு அந்த வழியாக செல்போவரை வாகனங்களை நிறுத்த சொல்லி மிரட்டுவதாக கிடைத்த தகவலின் படி 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்றேன்.

3) போய் பார்த்தபோது அங்கே வாள்போன்ற கத்தியுடன் மிரட்டிகொண்டிருந்த எதிரி துளசி (எ) துளசிராமனை 12.45 மணிக்கு கைது செய்தும் 13.00 மணிக்கு அவர் கையில் வைத்திருந்த வாளை போலிஸ் சாட்சிகள் முன்னிலையில் மகஜர் மூலம் கைப்பற்றினேன். அப்போது பொதுமக்கள் யாரும் சாட்சியாக முன்வரவில்லை என்பதால் உடன் வந்த போலிசாரையே சாட்சியாக வைத்தேன்.

4)13.30 மணிக்கு எதிரி மற்றும் கைப்பற்றிய தடயத்துடன் நிலையம் வந்து எதிரி மீது கு.எண்.244/2024 பிரிவு 294(பி) 506(2) இ.த.ச. மற்றும் 25(1A) Arms Act ன்படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை இதுதான். அது **அ.சா.ஆ.3** ஆகும்.

5)அன்றைய தினமே 14.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் தியாகராஜன், காளிமுத்து ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன்.அந்த பார்வை மகஜர் இதுதான். அந்த மாதிரி வரைபடம் இதுதான். **அது அ.சா.ஆ.4** ஆகும்.

5)அன்றைய தினமே சாட்சிகள்அந்தோணிஅமல்ராஜ், அசோக், தியாகராஜன், கருப்பையன்

ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன்.

6) பின்பு எதிரியை திரேக பரிசோதனை செய்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்குஅனுப்பி வைத்தும் கைப்பற்றிய தடய பொருளை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த படிவம் 91 இதுதான்.அது **அ.சா.ஆ.5** ஆகும். தடய பொருளை நீதிமன்றத்தில் ஒப்படைத்த த.கா. 2711 சுஜாதா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

7) 11.6.2024 ம் தேதி என் விசாரணை முடித்து எதிரியின் மீது 294(பி) 506(2) இ.த.ச. மற்றும் 25(1A) Arms Act ன்படி இறுதி குற்ற அறிக்கை தாக்கல் செய்தேன்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நானே இந்த வழக்கின் புகார்தாரராக இருந்து கொண்டு நானே முதல் தகவல் அறிக்கை தயார் செய்து நானே இறுதி அறிக்கை தயார் செய்ததது என்பது சட்டத்திற்கு முரணானது என்றால் சரியல்ல.

2) அ.சா.ஆ.1 ன் எதிரியின் கையொப்பம் இல்லை என்றால் சரிதான்.

3) தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வரவில்லை என்பதற்கு யார் யார் முன்வரவில்லை என்ற விபரமும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

4) சாட்சியம் அளிக்க முன் வராத நபர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை.

5) தனி நபர் சாட்சிகள் யாரும் இந்த சம்பவம் குறித்துபுகார் கொடுக்கவில்லை என்றால்

சரிதான். ஆனால் அவர் சரித்திர பதிவேடு குற்றவாளி என்பதால் சாட்சியம் அளிக்க முன்வரவில்லை.

6) நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் வீட்டில் இருந்த எதிரியை அழைத்து சென்று காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது ஒரு பொய்யான வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை

இல்லை.

/உண்மை நகல்/

ஒம்/ P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்